# THE COURT OF THE DISTRICT MUNSIF,

## Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons), District Munsif, Arni.

## O.S. 70/2020

2025=ம் ஆண்டு அக்டோபா் மாதம் 09ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness** **DW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | ° | கோகுலகிருஷ்ணன் | தொழில் | ° | ஓட்டுநர் |
| தந்தை பெயர் | ° | மோகனவேல் | வயது | ° | 54 |
| கிராமம் | ° | சைதாப்பேட்டை | | ° | |
| தாலுக்கா | ° | ஆரணி | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2025.** **நேரம் - 12.00**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் ஆரணி சைதாப்பேட்டையில் வசித்து ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**<u>ஆவணங்கள்</u>**

1. 29.04.2001 அன்று நடைபெற்ற என்னுடைய திருமண பத்திரிக்கை அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,

2. 13.02.2019ம் தேதி லட்சுமியம்மாள் 02.03.2009 அன்று கணவருடன் கூட்டாக எழுதிய பதிய செய்யப்பட்ட உயிலை ரத்து செய்த அசல் ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்,

3. 13.02.2019ம் தேதி லட்சுமியம்மாள் என்பவா் எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயில் அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும்,

4. 06.10.2020 தேதி மற்றும் 07.12.2020 தேதியிட்ட தாவா சொத்தின் வீட்டிற்கு நான் செலுத்திய மின்சார கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை இரண்டு) **பி.வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி வழக்கறிஞர் மேற்படி 4 ஆவணங்களையும் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்துள்ளார். எனவே மேற்படி 4 ஆவணங்களும் வாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

நேரம் - 12.10.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,Arni